# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

| | |
|---|---|
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 102/2013 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | சாம்பிரகாசம் |
| Husband Name / Father's Name | பேரின்பம் |
| Village | |
| Taluk | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of October 2019.

நான் தற்சமயம் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளேன். இதற்கு முன் மூன்றடைப்பு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது 06.12.2011ம் தேதி மதியம் 12.30 மணியளவில் நானும் என்னுடன் காவலர் 2633 திரு.சுப்பிரமணியன் என்பவரும் வாகைகுளம் ரயில்வே கிராசிங் பக்கம் ரோந்து செய்யும்போது அங்கே சந்தேகப்படும்படியாக ஒரு பிளாஸ்டிக் பையுடன் நின்ற நபர் (ஆஜர் எதிரி தானா என்றால் எதிரியை நான் பார்க்கவில்லை) எங்களை பார்த்தவுடன் அதை போட்டு விட்டு ஓடிவிட்டார். நாங்கள் சென்று மேற்படி பையை எடுத்து பார்த்தபோது அதில் 100 கிராம் போதை தரும் கஞ்சா இருந்தது. மேற்படி நபரை அக்கம்பக்கம் விசாரிக்க தம்பபுரம் சுப்பையா தேவர் மகன் பழனி என்பது தெரியவந்தது. மேற்படி கஞ்சாவை விற்பனை செய்வதற்காக வந்தது தெரியவந்தது. அவர் மீது நடவடிக்கை எடுக்க மேற்படி கஞ்சாவை அத்தாட்சி மூலம் கைப்பற்றி அதிலிருந்து 25 கிராம் கஞ்சாவை மாதிரிக்கு ஒரு சிறு பிளாஸ்டிக் பையில் வைத்து SHO சீல் வைத்து அத்தாட்சியில் கையெழுத்து செய்ய தனிநபர் யாரும் முன்வராததால் போலிசாராகிய நாங்களை கையெழுத்து செய்தோம். நான் தயார் செய்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவது தான். அது அ.சா.ஆ.1. அதிலுள்ள என்னுடைய முதலாவது கையெழுத்து அ.சா.ஆ.2. பின் 16.00 மணிக்கு நிலையம் வந்து மூன்றடைப்பு காவல்நிலைய குற்ற எண்.157/2011 பிரிவு 20(பி) NDPS Act-ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3. முதல் தகவல் அறிக்கையின் அசல், அத்தாட்சி சேர்த்து நான்குநேரி நீதித்துறை நடுவர் அவர்களுக்கும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பினேன். விசாரணை

நகலை காவலர் 2633 திரு.சுப்பிரமணியன் மூலம் நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

சம்பவ இடத்திலிருந்து ஓடிய நபரை யார் என்று யாரிடம் விசாரித்தேன் என்றால் அவர் பக்கத்து தோட்டத்தில் வேலை பார்த்து கொண்டிருந்தவர், யார் என்று எனக்கு தெரியாது. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது எதிரியின் பெயரை பக்கத்து தோட்டத்தில் வேலை பார்த்தவரிடத்தில் தான் கேட்டு தெரிந்து கொண்டேன் என்பதை சொன்னேனா என்றால் சொன்னேன். சம்பவத்தன்று சீருடையில் போனேனா என்றால் சீருடையில் தான் போனேன். எந்த வாகனத்தில் போனோம் என்றால் இருசக்கர வாகனத்தில் போனோம். எதிரி சம்பவ இடத்திலிருந்து எந்த திசை பார்த்து ஓடினார் என்றால் மேற்கு திசை பார்த்து ஓடினார். நான் பார்க்கும்போது எவ்வளவு தூரத்தில் ஓடினார் என்றால் சுமார் 100 அடி தூரத்தில் ஓடினார். நான் பார்க்கும்போது அவர் 100 அடி தூரத்தில் ஓடியதால் அவர் யார் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு தற்செயலாக போனேனா அல்லது தகவல் கிடைத்து போனேனா என்றால் தற்செயலாக ரோந்து போனோம். அத்தாட்சியை யார் எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். எங்கு வைத்து எழுதினேன் என்றால் சம்பவ இடத்தில் வைத்து இருசக்கர வாகனத்தில் வைத்து எழுதினேன். அப்போது அந்த இடத்தில் ஆட்கள் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. சம்பவம் நடந்தபோது நிலைய பொறுப்பு அதிகாரி யார் என்றால் நான் தான். இந்த வழக்கில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையை நான் தான் பதிவு செய்தேன் என்றால் சரிதான். அதன்பிறகு வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை எப்போது விசாரித்தார் என்றால் சம்பவம் நடந்த அன்றே மாலை 6.00 மணிக்கு விசாரித்தார். அதற்கு பின்னர் எதிரியை எப்போது கைது செய்தார்கள் என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் தேதி எனக்கு ஞாபகமில்லை. அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தபோது நிலைய பொறுப்பு அதிகாரியாக எத்தனை மணி வரை இருந்தேன் என்றால் இரவு 10.00 மணி வரை இருந்தேன். சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு உடனே வந்துவிட்டேனா என்றால் வந்துவிட்டேன். சம்பவ இடத்திற்கு போன இருசக்கர வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்றால் காவலர் சுப்பிரமணியன் ஓட்டினார். நான் சம்பவத்தன்று ரோந்து போனதாக சொல்வதும், எங்களை பார்த்தவுடன் எதிரி கஞ்சாவை போட்டுவிட்டு சம்பவ இடத்திலிருந்து ஓடியதாக சொல்வதும் உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரியை தடுப்பு காவல் சட்டத்தில் போடுவதற்காக புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொன்ன தேதியில், சொன்ன நேரத்தில் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF**

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No. 102/2013

Deposition Of Witness for — Prosecution PW 2 / Defense / Court

Name — சுப்பிரமணியன்

Husband Name / Father's Name

Village

Taluk

Religion

Age

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 1st day of October 2019.

நான் தற்சமயம் ஏர்வாடி காவல்நிலையத்தில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.12.2011ம் தேதி மூன்றடைப்பு காவல்நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராக பணியாற்றியபோது மதியம் 2.30 மணிக்கு மூன்றடைப்பு காவல்நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சாம்பிரகாசம் அவர்களுக்கு உதவியாக நான் போலிஸ் பார்டி சகிதம் தாழைகுளம் ரயில்வே கிராசிங் பக்கம் ரோந்து செய்து வரும்போது அங்கு நின்று கொண்டிருந்த நபர் (ஆஜர் எதிரி) கையில் பிளாஸ்டிக் பையை வைத்து கொண்டிருந்த நபர் போலிஸ் பார்டியாகிய எங்களை கண்டதும் பிளாஸ்டிக் பையை அங்கேயே போட்டுவிட்டு ஓடி தலைமறைவாகிவிட்டார். மேற்படி அவர் போட்டுவிட்டு சென்ற பிளாஸ்டிக் பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் சுமார் 100 கிராம் கஞ்சா இருந்தது. மேற்படி நபரை பற்றி அங்கு விசாரிக்கும்போது அந்த நபர் நான்குநேரி தம்புபுரத்தை சேர்ந்த சுப்பையா தேவர் மகன் பழனி என்றும், அவர் அந்த பகுதியில் கஞ்சா விற்பனை செய்து வந்ததும் தெரிய வந்தது. மேலும் மேற்படி நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி 100 கிராம் கஞ்சாவை சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் அத்தாட்சி மூலம் கைப்பற்றி அந்த இடத்தில் சாட்சிகள் யாரும் இல்லாததால் போலிஸ் பார்டியாகிய நானும், சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்களும் கையெழுத்து போட்டோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அது அ.சா.ஆ.4. கைப்பற்றிய கஞ்சாவில் 25 கிராம் கஞ்சாவை ஒரு பிளாஸ்டிக் கவரில் வைத்து SHO சீல் வைத்து ஆய்விற்காக எடுத்தோம். பின்னர் கைப்பற்றிய பொருளுடன் நிலையம் வந்து சிறப்பு உதவி ஆய்வாளர் அவர்கள் மேற்படி நபர் மீது வழக்கு பதிவு செய்தார்கள். மேற்படி

முதல் தகவல் அறிக்கையின் விசாரணை நகலை சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.சாம்பிரகாசம் அவர்களிடமிருந்து மாலை 4.30 மணிக்கு பெற்று நான்குநேரி வட்ட ஆய்வாளர் அவர்களிடம் விசாரணைக்காக கொடுத்தேன். வழக்கு சம்பந்தமாக நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நாங்கள் சம்பவ தினத்தன்று ரோந்து பணிக்கு சென்றபோது நிலைய பொறுப்பு அதிகாரியாக நிலையத்தில் யார் இருந்தார்கள் என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் சாம்பிரகாசம் இருந்தார். சம்பவ இடத்திற்கு யார் யார் போனோம் என்றால் நானும், அ.சா.1ம் தான் போனோம். சம்பவ இடத்திலிருந்து ஓடிய நபர் எதிரி தான் என்று யாரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன் என்றால் அங்கு கடை வைத்திருப்பவரிடம் கேட்டு தெரிந்து கொண்டேன், அவர் பெயர் தெரியவில்லை. அது என்ன கடை என்றால் பலசரக்கு கடை. பலசரக்கு கடை வைத்திருந்த நபரிடம் தான் தெரிந்து கொண்டேன் என்று ஆய்வாளரிடம் சொன்னேன் என்றால் சொல்லவில்லை. பலசரக்கு கடைக்கு எந்த திசையில் அந்த நபர் ஓடினார் என்றால் சுமார் 50 மீட்டர் மேற்கு பக்கம் ஓடினார். சம்பவ இடத்திற்கு நானும், அ.சா.1ம் தனித்தனி வாகனத்தில் போனோமா என்று சொன்னால் இல்லை ஒரே வாகனத்தில் தான் போனோம். நாங்கள் சம்பவ இடத்திற்கு போகும்போது எவ்வளவு தூரத்தில் எதிரி எங்களை பார்த்தார் என்றால் சுமார் 100 மீட்டர் தொலைவில் பார்த்தார். நாங்கள் எந்த திசையிலிருந்து எந்த திசை நோக்கி போனோம் என்றால் மேற்கிலிருந்து கிழக்காக போனோம். எதிரி எந்த திசை பார்த்து ஓடினார் என்றால் கிழக்கு பார்த்து ஓடினார். அ.சா.ஆ.1 அத்தாட்சி யார் எழுதினார்கள் என்றால் அ.சா.1 தான் எழுதினார். அ.சா.ஆ.1 அத்தாட்சியை எந்த இடத்தில் வைத்து எழுதினோம் என்றால் எங்களுடைய வண்டியில் வைத்து தான் எழுதினோம். வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை எப்போது விசாரித்தார் என்றால் 18.00 மணிக்கு விசாரித்தார். எங்களிடம் விசாரித்த பிறகு தான் எதிரியின் பெயரை ஆய்வாளர் தெரிந்து கொண்டாரா என்றால் சரிதான். நான் சொல்வது போன்று நான் சம்பவ இடத்திற்கு போகும்போது எதிரி கஞ்சாவை போட்டுவிட்டு ஓடியதாக சொல்வது உண்மையல்ல என்று சொன்னால் சரியல்ல. எதிரியை தடுப்பு காவல் சட்டத்தில் போடுவதற்காக புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக இந்த வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அத்தாட்சி காவல்நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.